**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை 600 006**

**மேல்நிலை (இரண்டாம் ஆண்டு) துணைத் தேர்வு செப்டம்பர்/அக்டோபர் 2018**

**தனித்தேர்வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்றல்**

**செய்திக்குறிப்பு**

நடைபெறவுள்ள செப்டம்பர்/அக்டோபர் 2018 மேல்நிலை (இரண்டாம் ஆண்டு) துணைத் தேர்விற்கு இத்துறையால் நடத்தப்பட்ட மேல்நிலை தேர்வெழுதி தேர்ச்சி பெறாத மற்றும் தேர்விற்கு விண்ணப்பித்து Hall Ticket பெறப்பட்டு தவிர்க்க இயலாத காரணங்களால் தேர்விற்கு வருகைபுரியாத தனித்தேர்வர்கள் (H வகையினர்), **தோல்வியுற்ற / வருகை புரியாத பாடங்களில் தேர்வெழுத ஆன்–லைனில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

அரசாணை (நிலை) எண்.185, பள்ளிக்கல்வி (ஜிஇ1) துறை, நாள்.09.08.2017–ன்படி பழைய நடைமுறை பாடத்திட்டத்தின்படி (200 மதிப்பெண்கள் வீதம் மொத்தம் 1200 மதிப்பெண்களுக்கு) தேர்வெழுதி தோல்வியுற்ற மேற்குறிப்பிட்ட வகை தனித்தேர்வர்களுக்கு தேர்வர்கள் **செப்டம்பர்/அக்டோபர் 2018 மற்றும் மார்ச் 2019 ஆகிய இரு பருவங்களில் மட்டுமே தோல்வியுற்ற / வருகை புரியாத பாடங்களைத் தேர்வெழுத வாய்ப்பளிக்கப்படும்.**

அரசாணை (1டி) எண்.573 பள்ளிக்கல்வி (ஜிஇ1) துறை, நாள். 03.10.2017–ன்படி பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு அல்லது அதற்கு இணையான தேர்வில் தேர்ச்சி பெற்று **நேரடி தனித்தேர்வராக (HP வகை) மேல்நிலை இரண்டாம் ஆண்டு தேர்வெழுத இப்பருவம் முதல் விண்ணப்பிக்க இயலாது.**

## Government Examinations Service centres க்கு சென்று விண்ணப்பிப்பதற்கான தேதிகள்

தனித்தேர்வர்கள் கல்வி மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள Government Examinations Service centres–க்கு சென்று 27.08.2018 (திங்கட்கிழமை) முதல் 01.09.2018 (சனிக்கிழமை) மாலை 05.45 மணிக்குள் தங்களின் விண்ணப்பத்தினை பதிவு செய்து கொள்ளலாம்.

மேற்குறிப்பிட்டுள்ள தேதிகளில் விண்ணப்பிக்கத் தவறும் தனித்தேர்வர்கள் **ரூ.1000/– கூடுதல் கட்டணத்துடன் "சிறப்பு அனுமதி திட்டத்தில் (Takkal)" 03.09.2018 (திங்கட்கிழமை) மற்றும் 04.09.2018 (செவ்வாய்கிழமை)** ஆகிய இரு தேதிகளில் ஆன்–லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

..2..

**<u>விண்ணப்பங்களை ஆன்–லைனில் பதிவு செய்வதற்கு அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வுகள் சேவை மையங்கள் (Government Examinations Service centres)</u>**

ஆண் தனித்தேர்வர்களும், பெண் தனித்தேர்வர்களும் தங்களது விண்ணப்பங்களை ஆன்–லைனில் பதிவு செய்திட கல்வி மாவட்ட வாரியாக தனித்தனியே சேவை மையங்கள் (Service centres) அமைக்கப்பட்டுள்ளன. தனித்தேர்வர்கள் (H வகையினர்) இம்மையங்களுக்கு நேரில் சென்று தங்களது விண்ணப்பங்களை பதிவு செய்துக் கொள்ள வேண்டும்.

கல்வி மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள சேவை மையங்களின் (Government Examinations Service centres) விவரங்கள் மற்றும் ஆன்லைனில் விண்ணப்பங்கள் பதிவு செய்தல் குறித்த கூடுதல் அறிவுரைகள் ஆகியவற்றை www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் விண்ணப்பதாரர்கள் அறிந்து கொள்ளலாம். மேலும், அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகங்கள், அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகங்கள் மற்றும் அரசுத் தேர்வுகள் மண்டலத் துணை இயக்குநர் அலுவலகங்களிலும் அறிந்து கொள்ளலாம்.

**<u>தேர்வுக் கட்டணம், ஆன்–லைன் பதிவுக் கட்டண விவரம் மற்றும் செலுத்தும் விதம்:</u>**

| | | | |
|---|---|---|---|
| 1. | மறுமுறை தேர்வெழுதுவோர் (H வகை தனித்தேர்வர்கள்) | ஒவ்வொரு பாடத்திற்கும் ரூ.50/– வீதம் தேர்வுக் கட்டணமும், அதனுடன் இதரக் கட்டணமாக ரூ35/–ம் செலுத்த வேண்டும். | ஆன்–லைன் பதிவுக் கட்டணம் ரூ.50/– |

தேர்வுக் கட்டணம் மற்றும் ஆன்–லைன் பதிவுக் கட்டணத்தினை பணமாக செலுத்த வேண்டும்.

**<u>மாற்றுத் திறனாளிகள் கவனத்திற்கு:</u>**

1. பார்வையற்றோருக்கு மேற்குறிப்பிட்ட தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

2. மாற்றுத் திறனாளிகள், டிஸ்லெக்சியா, நரம்பியல் கோளாறு ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட தேர்வர்கள், தேர்வெழுதும் போது சொல்வதை எழுதுபவர், கூடுதல் ஒரு மணி நேரம் ஆகிய குறிப்பிட்ட சலுகைகளை பெற விரும்பினால் உரிய மருத்துவச் சான்றிதழ்களை இணைத்து தனியே ஒரு சலுகை கோரும் கடிதத்தை தமது விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

**<u>விண்ணப்ப எண்ணின் முக்கியத்துவம்:</u>**

ஆன்–லைனில் விண்ணப்பத்தினை பதிவு செய்த பிறகு, தனித்தேர்வர்களுக்கு ஒப்புகைச் சீட்டு வழங்கப்படும். ஒப்புகைச் சீட்டினை தனித்தேர்வர்கள் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் தங்களது விண்ணப்பங்களில் ஏதேனும் குறைபாடு உள்ள பட்சத்தில் தங்களுக்கு தேர்வெழுத அனுமதி மறுக்கப்படும் சூழ்நிலையில் அவ்விண்ணப்ப எண்ணைக் (Application Number) கொண்டே அரசுத் தேர்வுத் துறையில் அனுமதி மறுக்கப்பட்டதற்கான காரணத்தை அறிய இயலும்.

**<u>தேர்வு மையம்:</u>**

தனித்தேர்வர்கள் அவரவர்கள் விண்ணப்பிக்கும் கல்வி மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள தேர்வு மையத்திலேயே தேர்வு எழுத வேண்டும்.

**<u>தனித்தேர்வர்கள் சேவை மையத்தில் (Service Centre) சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்</u>**

**<u>தனித்தேர்வர்கள்</u>**

1. உரிய தேர்வுக் கட்டணம் மற்றும் ஆன்–லைன் பதிவுக் கட்டணத்தினை சேவை மையங்களில் (Service Centre) பணமாகச் செலுத்த வேண்டும்
2. மதிப்பெண் சான்றிதழ் ஒளிநகல் (இதுவரை எழுதிய மேல்நிலைத் தேர்வுகளுக்கானது). ஜூன் 2018 பருவத்தில் தேர்வெழுதியோர் தற்காலிக மதிப்பெண் சான்றிதழின் நகலினை இணைக்க வேண்டும்.
3. பள்ளித் தலைமை ஆசிரியரிடம் பெற்ற தகுதிச் சான்றிதழ் (பள்ளி மாணவராக பதிவுசெய்யப்பட்டுதேர்வெழுதாதவர்களுக்கு மட்டும்).
4. செய்முறை மதிப்பெண்களுக்கான ஆவணம் (செய்முறை அடங்கிய பாடங்களைத் தேர்வெழுதுவோர் மட்டும்)

மேற்குறிப்பிட்டுள்ள இணைப்புகளுடன் பெறப்படாத விண்ணப்பங்கள் மற்றும் தபால் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

தேர்வு முடிவுகள் வெளியிடப்படும் வரை தனித்தேர்வர்களுக்கு தேர்வெழுத வழங்கப்படும் அனுமதி தற்காலிகமானது எனவும், தனித்தேர்வர்களின் விண்ணப்பம் மற்றும் தகுதி குறித்து ஆய்வு செய்யப்பட்ட பின்னரே தேர்வு முடிவுகள் வெளியிடப்படும்.

**ஒம்/–**
**இயக்குநர்**

**இடம்: சென்னை–6**
**நாள் :20.08.2018**